## மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள

# ஷேர் ஆட்டோக்கள், டாக்சி சேவையால் 89ஆயிரம் பேர் பயன்

சென்னை, மே 8: சென்னையில் உள்ள மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ள சுற்றுவட்டார பகுதிகளுக்கு ஷேர் ஆட்டோ, ஷேர் டாக்சி சேவை கடந்த ஆகஸ்ட் மாதம் தொடங்கப்பட்டது. பயணிகள் விரைவாக மெட்ரோ ரயில் நிலையத்துக்கு வந்து செல்ல வேண்டும் என்பதற்காக, இது 7 ரயில் நிலையங்களில் தொடங்கப்பட்டது.

இந்த சேவையை கடந்த மார்ச் மாதம் 42 ஆயிரத்து 289 பேர் பயன்படுத்தியுள்ளனர். இதில் டாக்சி சேவையை 6 ஆயிரத்து 574 பேரும், ஆட்டோ சேவையை 35 ஆயிரத்து 715 பேரும் பயன்படுத்தி உள்ளனர். இதேபோன்று, ஏப்ரல் மாதத்தில் 44 ஆயிரத்து 940 பேரில் டாக்சி சேவையை 6 ஆயிரத்து 260 பேரும், ஆட்டோ சேவையை 38 ஆயிரத்து 680 பேரும் பயன்படுத்தியுள்ளனர்.

இச்சேவை தொடங்கப்பட்ட ஆகஸ்ட் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை 3 லட்சத்து 3 ஆயிரத்து 795 பேர் பயன்படுத்தியுள்ளனர். இந்த தகவலை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்டுள்ளது.